**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 105** **நாள்: 08.08.2016**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.7.34 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கும் பணிகள் தீவிரம் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி மழைநீர்வடிகால் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் இன்று (08.08.2016) மண்டலம்–8, வார்டு–94, சிட்கோ நகர், 2வது மற்றும் 4வது பிரதான சாலைகள் சந்திப்பில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணியை துவக்கி வைத்தார்கள்.

2015–ல் இயற்கை சீற்றம் காரணமாக பெய்த மழையில் அம்பத்தூர் ஏரியிலிருந்து வெளியான உபரி நீர், கொரட்டூர் கால்வாய் வழியாக, வில்லிவாக்கம் பகுதியை சூழ்ந்து வெளியேற வழியில்லாமல் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. இனிவரும் காலங்களில் இவ்விதமான பாதிப்பை தவிர்க்கும் பொருட்டு சிட்கோ நகர் பகுதியில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற, சிட்கோ நகர் 1வது பிரதான சாலையிலிருந்து 2வது பிரதான சாலை மற்றும் ‘பி’ செக்டார் வழியாக மயான பூமி சுற்றுச்சுவர் வரை ஏற்கனவே உள்ள சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு, ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் 400 மீட்டர் நீளத்திற்கு கான்கிரீட் பெட்டக வடிவிலான 1500 X 1500 மி.மீ. அளவுள்ள புதிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி இன்று துவக்கி வைக்கப்பட்டது.

இப்பணியின் தொடர்ச்சியாக எம்.டி.எச் சாலையின் தெற்கு புறம் உள்ள குமாரசாமி நகரில் பழைய சிதிலமடைந்த மழைநீர் வடிகால்வாயை இடித்துவிட்டு 3000 X 3000 மி.மீ. அளவுள்ள பக்க சுவருடன் கூடிய புதிய கான்கிரீட் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு ரூ.2.28 கோடிக்கு மதிப்பீடு தயாரித்து ஒப்பம் கோரப்படவுள்ளது.

டி.வி.எஸ். கால்வாயை ஒட்டி அன்னை சத்தியா நகர் முதல் பாடி மேம்பாலம் வரை 3000 X 3500 மி.மீ. அளவிற்கு மழைநீர் வடிகால்வாய் ரூ.3.41 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி இந்த மழைநீர் வடிகால்வாய்கள் கட்டும் பணிகளை வரும் பருவமழை காலத்திற்கு முன் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சிட்கோ நகர் பகுதியில் மழைக்காலங்களில் தேங்கும் மழைநீர் இந்த வடிகால்வாய்கள் மூலம் டி.வி.எஸ். கால்வாய் வழியாக ஒட்டேரி நல்லா கால்வாயை சென்றடையும். இதன் மூலம் சிட்கோ நகர் மற்றும் இந்நகரை சார்ந்த பகுதியில் வெள்ளம் தேங்குதல் தவிர்க்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.வெற்றிவேல், முன்னாள் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.சி.டி. பிரபாகர், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர். சுபோத்குமார், இ.ஆ.ப., 8வது மண்டலக்குழுத் தலைவர் திரு.ஏ.இ. வெங்கடேசன், மாமன்ற உறுப்பினர் திருமதி வி. வசந்தா மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**